<u>**வாக்குமூலம்**</u>

<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>

<u>**வழக்கு எண் : SC.No. 57/2022**</u>

<u>**வழக்கு சாட்சி PW-9**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காளீஸ்வரி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பலவேசம் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 30th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் தற்போது தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். 2015ம் வருடம் தென்காசி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 30.05.2015ம் தேதி, காலை 09.15 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, பயிற்சி உதவி ஆய்வாளர் குருசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த தனி அறிக்கையை பெற்று அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.254/2015, சட்டப்பிரிவுகள் 294(பி), 353, 323, 307, 506(2) இதசவின் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகும். காவலர் சகீர் என்பவருக்கு மருத்துவ நமூனா எண்.96/2015 கொடுத்து சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –**

காவலர் சக்கீர் என்பவருக்கு காயம் ஏற்பட்டதாக முதல்தகவல்அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி அரசு பணியை செய்ய விடாமல் தடுத்து விபரம் முதல்தகவல்அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எதிரி கொலை செய்ய முயன்றதாக முதல்தகவல்அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மருத்துவ நமூனா காயம்பட்டவருக்கு கொடுத்ததாக முதல்தகவல்அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. முதல்தகவல்அறிக்கை நீதிமன்றத்திற்கு மாலை 07.45 மணிக்கு வரப்பெற்றுள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன நாளில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.01 16:53:32 +0530